அலகு

3

# நல்ல குடிமகன்

## கற்றல் நோக்கங்கள்




**மாணவர்கள் இப்பாடத்தைக் கற்பதன் வாயிலாக:**

- ❖ மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் பற்றி அறிந்துகொள்வர்.
- ❖ நற்பண்புகள் பற்றித் தெரிந்துகொள்வர்.
- ❖ நற்பண்புகளை வளப்படுத்தக்கூடிய காரணிகள் பற்றி தெரிந்துகொள்வர்.

VL06A

## மனிதன் ஒரு சமூக விலங்கு



மனிதர்களுக்கு புலன்கள் உள்ளன. மனிதர்கள் தங்கள் புலன்களைப் பயன்படுத்தி சிந்தித்து செயல்படுகின்றனர். சுதந்திரமாக பிறக்கின்றனர். ஆனால் சமூகத்துடன் பிணைக்கப்பட்டுள்ளனர். அவர்களால் தனித்து வாழ முடியாது. அவர்களுக்கு சமூக, உணர்வுப்பூர்வமான ஆதரவு தேவை. சமுதாயத்தில் வாழ்வதற்கு அவர்கள் நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.



5th_Social_Science_TERM-I_TM_UNIT-3.indd 161 13-12-2021 14:54:47

நாம் சில பண்புகளையும், உரிமைகளையும் பிறப்பிலேயே பெற்றிருக்கிறோம். இந்த பண்புகள் கல்வி நிலையங்களில் மேலும் மெருகூட்டப்படுகின்றன. ஒரு நபரை **மதிப்புமிக்க மனிதனாக** மாற்றுவததே **கல்வியின் நோக்கம்** ஆகும்.




இந்த படங்கள் உணர்த்துவது என்ன?

## நற்பண்புகள்

சமுதாயத்தை இயங்க வைக்கும் ஒரு நபரின் குணங்கள் தான் **நற்பண்புகள்**. இந்த நல்ல குணங்களை அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும். **குடிமை** என்ற சொல் **ஒரு நாட்டின் மக்கள்** அல்லது **குடிமக்கள்** பற்றியதாகும். மக்கள் **ஒற்றுமையாக** இணைந்து வாழ வேண்டும். அனைத்து வேறுபாடுகளையும் களைந்து ஒற்றுமையாக வாழ்வது ஒரு குறிப்பிடத்தக்க நற்பண்பாகும். பிறருக்கு உதவுதல் ஒரு முக்கியமான **நற்பண்பாகும்**.



5th_Social_Science_TERM-I_TM_UNIT-3.indd 162 13-12-2021 14:54:48

மக்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது, அனைவரும் ஒன்று. இன்றைய குழந்தைகள் நாட்டின் நாளைய குடிமக்கள். குழந்தைகளிடையே **ஒழுக்க நெறி** மற்றும் **நற்பண்புகள்** வளர வேண்டும். அதனால் அவர்கள் மதிப்புமிக்க குடிமக்களாக மாறுகின்றனர்.


**ஒழுக்கநெறிகள்**

- தனிப்பட்ட நெறிமுறைகள்
- பண்பாட்டு நெறிமுறைகள்
- சமூக நெறிமுறைகள்
- நற்பண்பு (விழுமம்) நெறிமுறைகள்
- அரசியலமைப்பு நெறிமுறைகள்

**நாம் அறிந்து கொள்வோம்.**

உலகம் அறநெறி உள்ளதால் உயிர்த்துள்ளது.
சுயநலம் என்பது ஒழுக்கநெறி அல்ல,
சுயநலமின்மை என்பதே ஒழுக்கநெறி.

*–சுவாமி விவேகானந்தர்*



**செயல்பாடு**
**நாம் எழுதுவோம்**

1. உன் தாய்மொழி என்ன?_______________.
2. _______________ என்பது சிறந்த கொள்கை.
3. வட இந்தியாவின் முக்கிய உணவு என்பது _______________.
4. _______________ தென்னிந்தியாவின் முக்கிய உணவு.
5. உனக்கு எத்தனை மொழிகள் தெரியும்?_______________.

## தனிப்பட்ட நெறிமுறைகள்

**தனிப்பட்ட நெறிமுறை** என்பது ஒவ்வொரு தனிநபருக்குமான அடிப்படை மதிப்பு ஆகும். சில தனிப்பட்ட நெறிமுறைகளாவன: **அன்பு, கருணை, பெருந்தன்மை, நேர்மை, உண்மை, நட்பு, விருந்தோம்பல், அமைதி, சகிப்புத்தன்மை, நம்பிக்கை.**

செயல்பாடு
நாம் எழுதுவோம்

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. அனைத்து உயிர்களிடத்தும் ______________ காட்டவேண்டும்.
2. ______________ யோடு ஏழைகளுக்கு உதவுங்கள்.
3. ______________ ஒரு சிறந்த கொள்கை.
4. மிகச் சிறந்த உறவாகக் கருதப்படுவது ______________.
5. விருந்தினர்களை உபசரிப்பது ______________ ஆகும்.
6. துன்புறுபவர்களுக்கு நாம் ______________ காட்டவேண்டும்.
7. எப்பொழுதும் ______________ பேசவேண்டும்.
8. பொது இடங்களில் ______________ யுடன் நடந்து கொள்ள வேண்டும்.

**சிந்தனை செய்**



1. __________ பெற மரங்கள் வளர்க்க வேண்டும்.
2. __________ வாழ்ந்தால் கோடி நன்மை.



5th_Social_Science_TERM-I_TM_UNIT-3.indd 164 13-12-2021 14:54:49

## பண்பாட்டு நெறிமுறைகள்

நற்பண்பு, பண்படுத்தப்பட்ட நன்னடத்தை ஒரு சமூகத்திற்கு மிக அவசியமான ஒன்றாகும். மொழி, மதம் எதுவாக இருந்தாலும் மக்கள் **ஒற்றுமையாக** இணைந்து வாழ்கின்றனர். இது **பண்பாட்டு நெறிமுறைகளை** வளர்க்க உதவும். நாம் அனைவரும் சகோதர, சகோதரிகளாக இணைந்து வாழ வேண்டும்.



## சமூக நெறிமுறைகள்

பொது இடங்களில் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

கீழ்க்காணும் நற்பண்புகளைப் பொது இடங்களில் பின்பற்ற வேண்டும்.

- மக்களுடன் நல்லுறவை எப்போதும் பேணுதல்
- பெரியோர்களை மதித்தல்
- இயற்கையைப் பாதுகாத்தல் (Preserve)
- சகிப்புத் தன்மையுடன் இருத்தல்
- நட்பை பேணி வளர்த்தல்





5th_Social_Science_TERM-I_TM_UNIT-3.indd 165 13-12-2021 14:54:50

**நாம் அறிந்து கொள்வோம்.**

- காயமடைந்த புறாவின் உயிரைக் காக்க பசித்த பருந்திற்கு, தன் தொடை சதையை **சிபி சக்கரவர்த்தி** வழங்கினார் (Offer).
- கன்றை இழந்த பசுவிற்கு நீதி வழங்க, **மனுநீதிச் சோழன்** தன் மகனை தேர் சக்கரங்களை ஏற்றிக் கொன்றார்.
- **வள்ளல் பாரி** தனது தங்கத் தேரை முல்லைக் கொடிக்கு வழங்கினார்.
- **வள்ளல் பேகன்** குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த மயிலுக்கு போர்வையை அளித்தார்.

## நடத்தை சார்ந்த நெறிமுறைகள்

**நடத்தை சார்ந்த நெறிமுறைகளாவன: நேரம் தவறாமை, ஈடுபாடு, அனைவரையும் சமமாக நடத்துதல், சரியான நேரத்தில் வேலைகளைச் செய்தல், ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தல், தவறாமல் கடமைகளைச் செய்தல்.**

செயல்பாடு
நாம் எழுதுவோம்

கீழ்க்காணும் அட்டவணையில் **நற்பண்புகளை** வட்டம் இடுக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மு | ய | ர | நே | ர | ந் | த | வ | றா | மை | அ |
| ஈ | ல் | ம் | ஈ | ம் | ந | ம் | ர | ஈ | ம் | னை |
| டு | த | ர | ந | மு | க | ழு | ள் | ந | ய | வ |
| பா | த் | க | ர | ய | ம் | ல் | க | ர | மு | ரு |
| டு | டி | ல் | ழு | நே | ர | ம் | பு | ந | ம் | ம் |
| ய | பி | ம் | தோ | ம் | ம் | மு | ப் | ட | க | ச |
| ர | ப் | ந | மு | ச | க | ல் | தி | த் | ம் | ம |
| ஈ | டை | ர | வி | ல் | ர | ச | ம | தை | ல் | ம் |
| ம் | க | க | ய | ம் | ந | ழு | ய | மு | க | ய |
| ய | ம் | ர | ஈ | க | ட | மை | க | ள் | ந | ந |
| ஒ | ழு | க் | க | மு | றை | க | ள் | ர | ஈ | ம் |

ஒரு **குடிமகன்** என்பவர் ஒரு குறிப்பிட்ட நாட்டின் உறுப்பினராக இருந்து, பல்வேறு உரிமைகளை அனுபவித்து, தனது கடமைகளை நிறைவேற்றுகிறார். ஒரு இறையாண்மை பெற்ற அரசு தனது குடிமக்களுக்கு வாழும் உரிமை, கல்வி பெறும் உரிமை, வாக்களிக்கும் உரிமை, வேலை செய்யும் உரிமை, தேசத்தில் எங்கும் குடியிருக்கும் உரிமை ஆகியவற்றை வழங்குகிறது.

## அரசியலமைப்பு நெறிமுறைகள்:

- பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- தேசத்தின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்தல்.
- விஞ்ஞான மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுதல்.
- இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்.
- சுற்றுச்சூழலைப் பராமரித்தல்.
- தேசியச் சின்னங்களை மதித்தல்.
- தியாகிகளுக்கும் அவர்களின் தியாகங்களுக்கும் மதிப்பளித்தல்.
- நமது கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தைக் காத்தல்.
- நாட்டுப்பற்றை வளர்த்துக் கொள்ளுதல்.



**நாம் அறிந்து கொள்வோம்.**

- விதிகளை மீறக்கூடாது.
- எங்கும் துப்புதல் மற்றும் குப்பைகளை கொட்டுதல் கூடாது.
- நிலத்தையும், நீரையும் மாசுபடுத்தக்கூடாது.
- பழையப் பொருள்களைத் தெருக்களில் எரிக்கக்கூடாது.
- சாலைகளில் வெள்ளைப் பூசணிக்காயினை உடைக்கக் கூடாது.



செயல்பாடு
நாம் எழுதுவோம்

## பொருத்துக



டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம்



தேசியக் கொடி



அன்னை தெரெசா

1) அமைதி
2) சுற்றுச்சூழல்
3) பொதுச் சொத்து
4) தேசியச் சின்னம்
5) விஞ்ஞான மனப்பான்மை



பேருந்து



மரம்

**குடியுரிமை** என்பது சிறந்த முறையில் **குடிமக்களாக** வாழ்வதற்கான உரிமை. இது அரசு நடவடிக்கைகளில் குடிமக்களின் பங்கேற்பையும் உள்ளடக்கியதாகும்.



5th_Social_Science_TERM-I_TM_UNIT-3.indd 168 13-12-2021 14:54:51

## நற்பண்புகளை வளப்படுத்தக்கூடிய காரணிகள்:

- கல்வியறிவு
- விழிப்புணர்வு மற்றும் ஆர்வத்தை உருவாக்குதல்
- வெற்றி பெறும் வரை முயற்சி செய்தல்
- தன்னைத்தானே மதிப்பீடு செய்தல்
- ஏற்றுக் கொள்ளுதல்
- தன்னம்பிக்கை (Self confidence)

**சுகாதாரத்தைப்** பேணிக்காப்பது ஒரு முக்கிய அம்சமாகும். ஒவ்வொரு மாணவருக்கும் சுகாதாரமாக இருக்க கற்றுக்கொடுக்கப்பட வேண்டும் மேலும். கீழே உள்ள வழக்கத்தை பின்பற்ற வேண்டும்.

- அதிகாலையில் விழித்தெழல்
- பற்களை துலக்குதல்
- தினமும் குளித்தல்
- சுத்தமான ஆடைகளை அணிதல்
- காலணிகள் அணிதல்
- முடியை ஒழுங்கு செய்து, நகங்களை வெட்டுதல்
- உணவுக்கு முன்னும் பின்னும் கைகளைக் கழுவுதல்.



### கலைச்சொற்கள்

| | |
|---|---|
| வழங்குதல் | : Offer |
| பாதுகாத்தல் | : Preserve |
| தன்னம்பிக்கை | : Self confidence |



### மீள்பார்வை

- நற்பண்புகள் நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் மேம்படுகின்றன.
- நேர்மையே சிறந்த கொள்கை.
- நற்பண்புகள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. தனிப்பட்ட நெறிமுறைகள்
2. பண்பாட்டு நெறிமுறைகள்
3. சமூக நெறிமுறைகள்
4. ஒழுக்க நெறிமுறைகள்



5th_Social_Science_TERM-I_TM_UNIT-3.indd 169 13-12-2021 14:54:51



# மதிப்பீடு



## I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மனிதன் ஒரு __________.
2. குடிமை என்ற சொல் ஒரு நாட்டின் __________ பற்றியதாகும்.
3. ஒரு நபரை __________ மாற்றுவதே கல்வியின் முக்கிய குறிக்கோள் ஆகும்.
4. __________ என்பது ஒவ்வொரு தனிநபருக்குமான அடிப்படை மதிப்பு ஆகும்.
5 தன் பணியில் __________ தவறாமல் இருக்க வேண்டும்.

## II. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1 | தனிப்பட்ட நெறிமுறை | ஒற்றுமை |
| 2 | பண்பாட்டு நெறிமுறை | பாதிக்கும் காரணி |
| 3 | நடத்தை சார்ந்த நெறிமுறை | சகிப்புத்தன்மை |
| 4 | சமூக நெறிமுறை | நேரந்தவறாமை |
| 5 | வேலையின்மை | நேர்மை |

## III. பின்வருவனவற்றிற்கு விடையளிக்க.

1. குடிமகன் என்ற சொல்லை வரையறு.
2. ஐந்து தனிப்பட்ட ஒழுக்க நெறிகளைக் குறிப்பிடுக.
3. பண்பாட்டு நெறிமுறை பற்றி சிறுகுறிப்பு வரைக.
4. சமூக நெறிமுறைகள் என்றால் என்ன?
5. நடத்தை சார்ந்த நெறிமுறைகள் என்றால் என்ன?

## V. விரிவான விடையளிக்க.

1. அரசியலமைப்பு நெறிமுறைகள் பற்றி எழுதுக.
2. நற்பண்புகளை வளப்படுத்தக்கூடிய ஐந்து காரணிகளை எழுதுக.



5th_Social_Science_TERM-I_TM_UNIT-3.indd 170 13-12-2021 14:54:52